நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.456/2022

<u>அ.த.சா: 6 சாட்சியின் சான்றுரை</u>

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கௌதமன் | சாதி | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | மதம் | : |
| வட்டம் | : | வயது | : |

10–10–2024 நாளன்று 1969 ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

-------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்சமயம் திருநெல்வேலி மாவட்டம், வீரவநல்லூர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.12.2020 ம் தேதியில் நான் அல்லிநகரம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த பைஜல்ரகுமான் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவை பெற்று நிலைய குற்ற எண். 2611/2020 இ.த.ச.பிரிவுகள் 294 பி, 506(1)–ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–3** ஆகும். பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பைஜல் ரகுமான், தீன்இலாஹி, கனவாப் பீர், ரகமத்துல்லா ஆகியோரை விசாரித்து கு.வி.மு.ச. பிரிவு 161 ன் கீழ் வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 12.30 மணிக்கு சம்பவ இடத்தை சாட்சிகள் ஆரிப் ராஜா, ரபீக் ராஜா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயாரித்தேன். நான் தயாரித்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ–4** ஆகும். பின்னர் காவல்நிலையத்தில் ஆஜரான எதிரியை உரிய முறையில் கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். இறுதியாக விசாரணை முடித்து 11.01.2021 ம் தேதி வழக்கின் எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவுகள் 294 பி, 506(1)–ன் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> –

வழக்கின் புகார் மனுவில் எதிரி பத்து அடியாட்களுடன் வந்து தகராறு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆட்களுடன் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. எத்தனை ஆட்கள் வந்தார்கள் என்று புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். புகாரில் மயானத்தின் சர்வே நம்பர், விஸ்தீரணம் பற்றி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மயானத்தை சுற்றி நான்கு பக்கமும் சுவர் எழுப்பியுள்ளார்களா என்றால் ஒரு பக்கம் மட்டும் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. எதிரிக்கு பாத்தியப்பட்ட இடத்தை புகார்தாரர் தரப்பினர் ஆக்கிரமிப்பு செய்து மயானமாக பயன்படுத்தியுள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. புகாரில் அசிங்கமாக பேசியதாக உள்ள வார்த்தைகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மயானத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்று புகாரில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடம் மயானம் தான் என்பதற்கு எந்த அரசாங்க ஆவணமும் புகாருடன் கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். வாதிகள் மீது எதிரி கொடுத்த புகார் மனுவை நான் பரிசீலனை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்த வாதிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் மத ரீதியிலாக வாசகங்களை சொன்ன புகார்தாரருக்கு சாதகமாக இந்த வழக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தில் எந்த விதமான காயமும் யாருக்கும் இல்லை என்று சொன்னால் சரிதான். புகார் மனுவில் வாதிகள் அமைதியாக இருந்ததாக குறிப்பிட்டு எந்த வாசகமும் சொல்லப்படவில்லை என்றால் புகார் ஒரு நபரால் தான் கொடுக்கப்பட்டுள்ளது, மேற்சொன்ன வாசகம் ஏதும் புகாரில் குறிப்பாக இல்லை. புகார்தாரர் தரப்பினர் தான் எதிரியை தாக்கிவிட்டு மத ரீதியான போர்வையில் என்னிடம் பொய்யாக புகார் அளித்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் சம்ப வஇடத்திற்கு சென்று தீர விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*
*Sd/-K.Kavitha,*
Chief Judicial Magistrate,
Theni.